[டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 21

அதை பிரிக்க மாட்டோம் என்பதும், அதன் காரணமாக எழுகின்ற போக்குவரத்துச் சங்கடங்களை அகற்ற காவல் துறை விரும்புவதும் நியாயமாகத்தான் இருக்க முடியும். அதிலும் பொதுமக்களுக்கு இடையூறோ அல்லது சிறு கடைக்காரர்களுக்கு இடையூறோ இருக்குமேயானால் அதை இந்த அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்து, இந்த அளவில் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நான் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கின்ற காரணத்தால், தொடர்ந்து இதை விவாதிக்காமல் விட்டு விடலாம் என்று அவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். (குறுக்கீடு).

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இதிலே யாரும் பேசுவதற்கு இடமில்லை; உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

2. அமைச்சரின் அறிக்கை.

பயிரிடு குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்கும் சட்டம் இயற்ற அரசு முடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவை விதி 110 இன் கீழ் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் பேரவைக்கு இப்போது ஓர் அறிக்கை அளிப்பார்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயலாலும் மற்றும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு சட்டம் 60/86-இன் படி 30—6—1985 வரை கட்டவேண்டிய குத்தகை நிலுவைகளை ஐந்து சம தவணைகளில் வட்டியின்றி செலுத்திட வகை செய்யப்பட்டது. இச் சட்டத்தின்படி அளிக்கப்பட்ட கடைசித் தவணை 30—9—1988-வுடன் முடிவடைந்தது.

1987 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கடும் வறட்சி நிலவியது. 1988 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை சாதகமாக இருந்த போதிலும், வடகிழக்குப் பருவ மழை பொய்த்துவிட்டது. அதனால் பயிரிடு குத்தகைதாரர்கள் மேலே குறிப்பிட்ட பருவ நிலை பாதிப்பினின்று மீள முடியாத நிலை ஏற்பட்டு, தவணை முறையில் செலுத்த வேண்டிய குத்தகை நிலுவைகளை செலுத்த முடியாமல் போய்விட்டது.

1989 பிப்ரவரி 21] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

அதனால் பயிரிடு குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசு கருதுகிறது. இதற்கு உரிய சட்டம் இயற்ற அவசியம் ஏற்படுகிறது. எனவே, அரசு 30—9—1986 இல் உள்ள நிலுவையும் மற்றும் 20—2—1989 வரையில் நிலுவையிலுள்ள குத்தகைப் பாக்கிகளையும் செலுத்த இயலாத பயிரிடு குத்தகைதாரர்கள், தனிப்பட்ட நிலவுடைமையாளருக்கோ அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களுக்கோ குத்தகைத் தொகை நிலுவைகளை செலுத்தாத காரணத்திற்காக நிலத்திலிருந்து 30—9—1986 அன்றும் அதன் பிறகும், வெளியேற்றப்பட்டவர்களை மீண்டும் தொடர்ந்து பயிரிடு குத்தகைதாரர்களாக இருக்க அனுமதிக்கவும், குத்தகை நிலுவைகளை செலுத்தாத காரணத்தால் வெளி யேற்றப்படவிருக்கும் பயிரிடு குத்தகைதாரர்களின் மீதான நில வெளியேற்ற நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கவும். மேற்கண்ட பயிரிடு குத்தகைதாரர்கள் 31—3—1990 ஆம் நாளுக்குள் தவணை பாக்கிகளை செலுத்த அவகாசம் அளிக்கவும் அரசு கருதுகிறது. குத்தகை செலுத்தாத காரணத்திற்காக எந்தவொரு பயிரிடு குத்தகைதாரரையும் 31—3—1990 வரை நிலத்திலிருந்து வெளி யேற்றம் செய்யக்கூடாதெனவும் அரசு கருதுகிறது.

இது சம்பந்தமாக உரிய சட்டம் கொண்டுவரப்படும்.

3. தகவல் கோரல்.

(அ) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் இலங்கைக்குச் சென்றிருப்பதாக வந்துள்ள செய்தி.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, On a point of information, ஆளுங்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர் இலங்கை சென்றுள்ளார். அண்மையிலே டெல்லி சென்றிருந்த நமது மாண்புமிகு முதல்வரவர்கள் அங்கே பத்திரிகையாளர்கள் கூட்டத்திலே பேசுகிறபொழுது, யாழ்ப் பாணம் நீங்கள் செல்வீர்களா என்ற கேள்விக்கு, பிரதமரைச் சந்தித்ததற்குப் பிறகு, அதுபற்றி ஆலோசிக்கப்படும், முடி வெடுக்கப்படும் என்று சொல்லியிருந்தார்கள். எனவே, இப் பொழுது ஆளுங்கட்சியினுடைய முக்கிய தலைவர் ஒருவர் இலங்கைக்குச் சென்று இருக்கின்ற காரணத்தினாலே, இலங்கை இந்தியர் பிரச்சினைகளைப்பற்றிப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் நமது மாண்புமிகு முதலமைச்சரவர்

களிடமிருந்து ஏதாவது செய்தியினைக் கொண்டு போய் இருக்கின்றாரா அல்லது மாண்புமிகு முதலமைச்சர் தெரிந்து அவரை அனுப்பி சில தகவல்களைச் சேகரிக்க அனுப்பி இருக்கிறார்களா என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இலங்கைக்குச் சென்றுள்ள தி.மு.க. நண்பரைப் பற்றிய ஒரு குறிப்பைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் என்ற முறையில் இந்த அவையினுடைய முன்னவர் பேராசிரியர் அவர்கள் பத்திரிகைகளுக்கு விளக்கியிருக்கின்றார். எனவே, இலங்கைக்குச் சென்றிருப்பவர் என்னிடத்திலே அறிவித்துவிட்டுச் செல்லவும் இல்லை: நான் அவரை அனுப்பி வைக்கவும் இல்லை. இரண்டும் இல்லாத காரணத்தால் என்னிடமிருந்து அவர் செய்தி கொண்டு போக வழியும் இல்லை. பிரதமரிடத்திலும், பிரதமரிடத்திலே பேசிய பிறகு பிரதமருடைய சொற்படி வெளிவிவகாரத் துறை அமைச்சரிடத்திலும் நான் தமிழ் ஈழப் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசியிருக்கிறேன். தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இந்த நோக்கில் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் இலங்கைக்குச் சென்றிருப்பதாகத் தகவல் வந்ததே தவிர எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை. அதற்கும் இந்தப் பேச்சுக்களுக்கும் தொடர்பு இல்லை.

2. அமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி.

பயிரிடு குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்கும் சட்டம் இயற்ற அரசு முடிவு—தொடர்ச்சி.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு ஓர் அறிவிப்பைத் தந்திருப்பதற்கு நன்றி. அதிலே நீண்ட காலமாக குத்தகை செலுத்த முடியாமல் கடந்த 4 தவணை . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்கள் அவையில் அறிக்கை படிக்கிறபோது அதன்மீது எந்தவிதமான விவாதமும் கூடாது என்பது விதி.